

திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்ட மன்ற தொகுதிகுட்பட்ட ஆவடி மாநகராட்சி வார்டு 32 திருமுல்லைவாயில் ஸ்ரீ சிவசக்தி நகரில் ஆவடி சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து ரூபாய் 15 இலட்சம் மதிப்பீட்டில் டாக்டர் கலைஞர் விளையாட்டு பூங்காவை பயன்பாட்டிற்கு அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் திறந்து வைத்து பொதுமக்களுக்கு சிறுவர்களுக்கு இனிப்பு வழங்கினார் இந்நிகழ்வில் மாநகர மேயர் ஜி.உதயகுமார் , மாநகர ஆணையர் கந்தசாமி, மாநகர பொறுப்பாளர் சண் பிரகாஷ் மண்டல குழுத் தலைவர் அமுதா பேபி சேகர், பகுதி கழக செயலாளர் பேபி சேகர் மாமன்ற உறுப்பினர் சுதாகரன் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்

## மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. – எம்.எல்.நாதன் சிறப்புரை!

# காஞ்சிபுரம் வடக்கு ஒன்றியத்தில் 4 ஆண்டு சாதனை விளக்கப் பொதுக்கூட்டம்!

### க.செல்வம் எம்.பி.– சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ. பங்கேற்பு! பி.எம்.குமார் தலைமை!

காஞ்சிபுரம், மே 7 -

காஞ்சிபுரம் வடக்கு ஒன்றிய திமுக சார்பில் விஷார் ஊராட்சியில் உள்ள அம்பேத்கர் சிலை அருகில் (090525 வெள்ளிக்கிழமை) அன்று மாலை 6 மணியளவில் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்களின் நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும் பல்லாண்டு சாதனை விளக்கப் பொதுக் கூட்டம் ஒன்றிய செயலாளர் பி.எம்.குமார் தலைமையிலும் கிளை கழக செயலாளர் எஸ்.கர்ணன் வரவேற்பிலும் எ.ஆனந்தன்,டி.வீராசாமி, எல்.முனுசாமி,டி.சடகோபன்,வி.சி.கருணாநிதி,என.ஆனந்தன்,வி.ராஜேந்திரன்,டி.காமராஜ்,ஜி.ராஜேந்திரன்,வி.எ.சம்பத்குமார், எம்.மூர்த்தி, சாந்திகருணாநிதி,சுலோச்சனாஆண்டவன்,பி.தட்சனாமூர்த்தி,

அ.பாஸ்கர் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெறவுள்ளது.

இதில் சிறப்பு அழைப்பாளர்களாக காஞ்சி தெற்கு மாவட்ட செயலாளர் உத்திரமேரூர் சட்டமன்ற உறுப்பினர் க.சுந்தர், தலைமை கழக பேச்சாளர் எம்.எல்.நாதன், நாடாளுமன்ற உறுப்பினர் மாவட்ட துணை செயலாளர் க.செல்வம் மற்றும் காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர் கழக கொள்கை பரப்பு செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகின்றனர்.

இதில் காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர் மலர்க்கொடி குமார், தலைமை செயற்குழு உறுப்பினர் எம்.எஸ்.சுகுமார், மாவட்ட ஊராட்சி துணை தலைவர் நித்யா சுகுமார், தலைமை கழக பேச்சாளர் விசார் க.தமிழரசன், ஒன்றிய கழக நிர்வாகிகள் எஸ்.மாரிமுத்து,இரா. இளஞ்செழியன்,

எஸ்.வி.ரமேஷ், மகாலட்சுமி ராஜசேகர், அ.வேலுச்சாமி,எஸ்.எஸ்.ஆர். சசிகுமார்,பி.என். ரவி,நா.கருணாகரன், மாவட்ட அணியின் நிர்வாகிகள் சி. ராதாகிருஷ்ணன், ஆ.சசிகுமார்,தி.ராம்பிரசாத்,எஸ்.தமிழ்ச்செல்வன்,பி.எம்.நீலகண்டன் எம்.துரைசாமி எம்.மகாவீர் சந்த்,டி

.ராஜா,ஆர்.வரதன்,சி.எஸ்.விஜி,எஸ்.நவீன்,ஆ.தினேஷ் பாபு,எம். மகேந்திரன்,ஆர். விஜயலட்சுமி, ஒன்றிய அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் , கிளை கழக செயலாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள்,கழக மூத்த முன்னோடிகள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொள்கின்றனர்.

ஒன்றிய விவசாய தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் எம்.ஆண்டவன் மற்றும் ஊராட்சி மன்ற துணை தலைவர் பேபி செல்வம், ஆகியோர் நன்றியுரை ஆற்றுகின்றனர்

# நீலகிரி மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

### மாவட்டப் பொறுப்பாளர் கே.எம்.ராஜு அறிவிப்பு!

உதகை, மே 7-

நீலகிரி மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் இன்று (7.5.2025 புதன்கிழமை) காலை 11 மணி அளவில் மாவட்ட கழக அவைத் தலைவர் கே.போஜன் தலைமையில், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் பா.மு.முபாரக், கழக தேர்தல் பணி செயலாளர், அரசு தலைமை கொறடா கா.ராமசந்திரன் ஆகியோர் முன்னிலையில் மாவட்ட கழக அலுவலகமான உதகை கலைஞர் அறிவாலயத்தில் நடைபெறவுள்ளது.

இதில் மாவட்ட கழக நிர்வாகிகள், மாவட்டத்திலுள்ள தலைமை கழக நிர்வாகிகள், தலைமை கழக செயற்குழு-பொதுக்குழு உறுப்பினர்கள், நகர -ஒன்றிய பேரூர் கழக செயலாளர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் தலைவர்கள் உள்ளிட்ட அனைவரும் தவறாது கலந்து சிறப்பிக்க கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: 1. கழக தலைவர் - முதல்வர் அவர்கள் தலைமையில் சென்னையில் நடைபெற்ற மாவட்ட கழக செயலாளர்கள் கூட்ட முடிவுகள் குறித்து.

2. ஜூன்-3, முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவுவிழா நிகழ்ச்சிகள் குறித்து.

3. கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு மாவட்டக் கழக பொறுப்பாளர் கே.எம்.ராஜு அறிவித்துள்ளார்.

## சென்னை தென்மேற்கு மாவட்டத்தில் பகுதி வாரியாக

# திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனை விளக்கக் கூட்டங்கள்!

### மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ அறிவிப்பு!



சென்னை தென்மேற்கு மாவட்ட திமுக சார்பில் கழக தலைவர் முதலமைச்சர் தலைமையில் நடைபெற்ற மாவட்ட கழக கூட்டத்தில் நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும் திராவிட மாடல் ஆட்சி என்ற தலைப்பில் பகுதிவாரியாக நடைபெறும் விவரம் குறித்து மாவட்ட செயலாளர் மயிலை த.வேலு விடுத்துள்ள அறிவிப்பு வருமாறு

**நாள் : 8/5/2025 வியாழக்கிழமை**
**இடம் : மயிலாப்பூர் கிழக்கு பகுதி நொச்சிக்குப்பம்**
**உரையாற்றுவோர் – திண்டுக்கல் ஐ லியோனி**

**நாள்: 9/5/2025 வெள்ளிக்கிழமை**
**இடம்: மயிலாப்பூர் மேற்கு பகுதி ஆழ்வார்பேட்டை தெரு திருவள்ளுவர் சாலை**
**உரையாற்றுவோர் – ஆவடி க.மு ஜான்**

**நாள்: 11/5/2025 ஞாயிற்றுக்கிழமை**
**இடம்: தியாகராயா நகர் கிழக்கு பகுதி 10வது அவென்யூ அசோக் நகர்**
**உரையாற்றுவோர் – கொளஞ்சூர் எஸ்.முனுசாமி க.சுபத்ரா**

**நாள்: 12/5/2025 செவ்வாய்க்கிழமை**
**இடம் : தியாகராயர் நகர் மேற்கு பகுதி பாண்டி பஜார் பூ மார்க்கெட் அருகில்**
**உரையாற்றுவோர் – ஆர்.எஸ்.பாரதி**

மேற்கண்ட கூட்டங்களில் அந்தந்த பகுதிகளுக்கு உட்பட்ட மாநில, மாவட்ட நிர்வாகிகள், தலைமை செயற்குழு பொதுக்குழு, பகுதி பார்வையாளர்கள், பகுதி, வட்டக் கழக செயலாளர்கள், அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், கழக உடன்பிறப்புகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்

**மயிலை த.வேலு எம்.எல்.ஏ.**
செயலாளர், சென்னை தென்மேற்கு மாவட்ட தி.மு.க.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடந்த மாதம் திருவள்ளூர் மாவட்ட நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியில் பங்கேற்று பயனாளிகளுக்கு பட்டா வழங்கியது தொடர்ந்து கடம்பத்தூர் மேற்கு ஒன்றியம் வயலூர் திருமணிகுப்பம் ஊராட்சிகளில் தேர்வு செய்யப்பட்ட 115 பயனாளிகளுக்கு கிராமங்களுக்கு சென்று திருவள்ளூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி. இராஜேந்திரன் வீட்டு மனை பட்டாக்களை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் அலுவலர்கள் ரஜினிகாந்த், சௌந்தரி, செல்வி, ஒன்றிய செயலாளர்கள் மோ. ரமேஷ், எஸ். மகாலிங்கம், ஒன்றிய கழக நிர்வாகிகள் ஆர். கோபால், பிஞ்சிவாக்கம் ரவி, தேவஆசீர்வாதம், நீலாவதி ராஜேந்திரன், வள்ளி எலிசபெத் மதன் பார்த்திபன், ரவி, சீதாபதி, முருகன், சுப்பிரமணி, சீனிவாசன், ஆல்பர்ட், துரை, ஏழுமலை, மதன், நாராயணசாமி உள்ளிட்ட ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# எழும்பூர் தொகுதி: 4 இடங்களில் தண்ணீர்ப் பந்தல் திறப்பு! இ.பரந்தாமன் எம்.எல்.ஏ. ஏற்பாட்டில்!

சென்னை, மே 7 –

கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலுக்கு இணங்கவும் மாண்புமிகு கழக இளைஞரணிச் செயலாளர் தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதல்படியும் கழகச் சட்டத் துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன் ஏற்பாட்டில் எழும்பூர் தொகுதியில் மே 4, 6, மற்றும் 9 ஆகிய தேதிகளில் 12 இடங்களில் தண்ணீர்ப் பந்தல்கள் திறக்கும் நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

இரண்டாம் நாள் நிகழ்வாக நேற்று (06.05.2025) 61வது வட்டம், எழும்பூர் ரயில் நிலையம் அருகில்; 61 ‘அ’ வட்டம், பாந்தியன் சாலை, ஆதித்தனார் சிலை அருகில்; 78 ஆவது வட்டம், சூளை, பெரம்பூர் பேரக்ஸ் சாலைஅஷ்டபுஜம் சாலை சந்திப்பு மற்றும் 78 ‘அ’ வட்டம், சூளை நெடுஞ்சாலை, சூளை பழைய அஞ்சல் நிலையம் அருகில் ஆகிய நான்கு இடங்களில் தண்ணீர்ப் பந்தல்களைத் திறந்துவைத்து, இளநீர், தர்பூசணி, கிர்ணிப் பழம், வெள்ளரி, மோர் உள்ளிட்ட நீர்ச்சத்து கொண்ட உணவுப் பொருட்களைச் சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன் பொதுமக்களுக்கு வழங்கினார்.

இந்நிகழ்வில் எழும்பூர் தெற்குப் பகுதி முன்னாள் செயலாளர் ஜெ.விஜயகுமார், முன்னாள் வட்டச் செயலாளர் எஸ்.புருஷோத்தமன், புரசை எஸ்.குமார், எழும்பூர் தெற்குப் பகுதி முன்னாள் பொருளாளர் ந.கலையரசன், அவைத் தலைவர் வெ.மருதன், மாவட்டப் பிரதிநிதிகள் கமலக்கண்ணன், மா.காந்தி; எல்.சுகுமாரன், கி.புஷ்பராஜ், வழக்கறிஞர் நேரு பிரபாகரன், தொ.மு.ச. சென்னை கிழக்கு மாவட்ட அமைப்பாளர் எஸ்.சிம்பு என்ற பிரதாப்குமார், ஐ.கே.ஜெயசீலன், இ.சேகர்; வட்டத் துணைச் செயலாளர் மா.ராஜேந்திரன், பகுதிப் பிரதிநிதிகள் சி.குணசேகரன், ப.பன்னீர் செல்வம்; இரா.தாமோதரன், சூளை நேரு, புஷ்பலதா நேரு, எட்டு என்ற விஜயகுமார், எல்.குணசேகர், அசினா பேகம், பாக முகவர் கவிதா, ராணி ராமச்சந்திரன், தவமணி, தேன்மொழி, வழக்கறிஞர் தேசிக சோழன், வழக்கறிஞர் வீ.தமிழன்பன், வழக்கறிஞர் எம்.கோபி, ஆ.ஜெகன், கே.மணிகண்டன், சீனிவாசன், இ.வேலன், கே.நெல்சன், எல்.நரேஷ்குமார், பி.ஏ.மலையப்பன், கே.ஜானகிராமன், ப.கோவிந்தராஜ், பி.வினோத்குமார், வெரிகுட் தா.கார்த்திக், ஜவஹர், கணேசன், அரி கிருஷ்ணன், பி.ஜான், டி.ஆர்.மோகன்ராஜ், அக்பர், துணைவன், ராவ் கணேசன், வி.பிரபுராஜ், ஐ.நடேசன், எஸ்.முரளி, ஐ.இளவரசன், சிந்தை சுந்தர் உள்ளிட்ட கழக நிர்வாகிகளும் செயல்வீரர்களும் கலந்து கொண்டனர்.

## திருச்சி தெற்கு மாவட்டத்தில் திராவிட மாடல் ஆட்சியின்

# நான்கு ஆண்டு கால மகத்தான சாதனை விளக்க பொதுக்கூட்டங்கள்!

### மாவட்டச் செயலாளர் - அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிவிப்பு!



கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற, மாவட்ட செயலாளர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட “நாடு போற்றும் நான்காம் ஆண்டு தொடரட்டும் இது பல்லாண்டு” என்ற தலைப்பில் கூட்டங்கள் நடத்திட வேண்டும் என்ற அறிவிப்புக்கு இணங்க,திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் கீழ்க்கண்ட இடங்களில் பொதுக்கூட்டங்கள் நடைபெறும் இக்கூட்டங்கள் பகுதி,ஒன்றிய, நகர செயலாளர்கள் சிறப்பான முறையில் ஏற்பாடு செய்து நடத்திட வேண்டும் என தெரிவித்துக்கொள்கின்றேன்.

| வ.எண் | நாள்/நேரம் | பகுதி, ஒன்றியம், நகரம், பேரூர் கழகம் | தலைமை | தலைமை கழக பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|
| 1. | 10.05.2025 மாலை06.00 | பாலக்கரை பகுதி | டி.பி.எஸ்.எஸ்.ராஜ் முகமது பகுதி கழக செயலாளர் | இடிமுரசு.ந.மணிமுத்து |
| 2. | | திருவெறும்பூர் வடக்கு ஒன்றியம் | கே.எஸ்.எம்.கருணாநிதி ஒன்றிய கழக செயலாளர் | மா.கண்ணதாசன் |
| 3. | | மருங்காபுரி மத்திய ஒன்றியம் | எம்.பழனியாண்டி பகுதி கழக செயலாளர் | மதுக்கூர் மெட்ரோ.டி.சேகர் |
| 4. | 11.05.2025 மாலை06.00 | துவாக்குடி நகரம் | இ.காயாம்பு நகரகழக செயலாளர் | துரை தமிழ் செல்வன் |
| 5. | | கலைஞர் நகர் பகுதி | ஜி.மணிவேல் பகுதி கழக செயலாளர் | A.அப்துல் மஜீத் |
| 6. | | மருங்காபுரி தெற்கு ஒன்றியம் | சி.சின்ன அடைக்கண் ஒன்றிய கழக செயலாளர் | கொக்கரக்கோ சௌமியன் வைத்தியநாதன் |
| 7. | 12.05.2025 மாலை06.00 | பொன்மலை பகுதி | இ.எம்.தர்மராஜ் பகுதி கழக செயலாளர் | மதுக்கூர் மெட்ரோ.டி.சேகர் |
| 8. | | திருவெறும்பூர் தெற்கு ஒன்றியம் | சி.கங்காதரன் ஒன்றிய கழக செயலாளர் | மா.கண்ணதாசன் |
| 9. | | வையம்பட்டி வடக்கு ஒன்றியம் | சீரங்கன் ஒன்றிய கழக செயலாளர் | புலவர் அரங்க நாராயணசாமி |
| 10. | 13.05.2025 மாலை06.00 | மார்க்கெட் பகுதி | ஆர்.ஜி.பாபு பகுதி கழக செயலாளர் | A.அப்துல் மஜீத் |
| 11. | | திருவெறும்பூர் பகுதி | எஸ்.சிவக்குமார் பகுதி கழக செயலாளர் | V.சபரி ஆனந்த் |
| 12. | | மருங்காபுரி வடக்கு ஒன்றியம் | செல்வராஜ் ஒன்றிய கழக செயலாளர் | மா.கண்ணதாசன் |
| 13. | 14.05.2025 மாலை06.00 | மலைக்கோட்டை பகுதி | ஆர்.மோகன் பகுதி கழக செயலாளர் | பழ.புனிதம் |
| 14. | | காட்டூர் பகுதி | ஓ.நீலமேகம் பகுதி கழக செயலாளர் | இடிமுரசு.ந.மணிமுத்து |
| 15. | | மணப்பாறை ஒன்றியம் | இராமசாமி ஒன்றிய கழக செயலாளர் | மா.கண்ணதாசன் |
| 16. | 15.05.2025 மாலை06.00 | அரியமங்கலம் பகுதி | A.M.G.விஜயகுமார் பகுதி கழக செயலாளர் | புலவர் அரங்க நாராயணசாமி |
| 17. | | மணப்பாறைநகரம் | மு.ம.செல்வம் நகர கழக செயலாளர் | மதுக்கூர் மெட்ரோ.டி.சேகர் |
| 18. | | வையம்பட்டி தெற்கு ஒன்றியம் | V.A.ராஜேந்திரன் ஒன்றிய கழக செயலாளர் | கொக்கரக்கோ சௌமியன் வைத்தியநாதன் |

மேற்கண்டநிகழ்ச்சிகளில் மாநில,மாவட்ட, மாநகர நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி ஒன்றிய, நகர பேரூர், வட்ட, வார்டு, கிளை கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், அனைத்து அணிகளின் மாவட்ட, மாநகர, பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழக அணிகளின் அமைப்பாளர்கள்,துணை அமைப்பாளர்கள்,அனைத்து உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கழக தொண்டர்களும், மூத்த முன்னோடிகளும் நடைபெறும் கூட்டத்தில் தவறாமல் கலந்து கொள்ளும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி,**
செயலாளர் – திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க.



செங்கல்பட்டு மாவட்டம், கருங்குழி பேரூர் மேலவலம் பேட்டை பகுதியைச் சேர்ந்த பிரதீபா நேபாளம் சென்று சிலம்பம் போட்டியில் பங்கேற்று தங்கப் பதக்கத்தை வென்றார். அந்த மாணவியை பாராட்டியும் மேலும் பல்வேறு போட்டிகளில் கலந்து கொள்வதற்காகவும் காஞ்சி தெற்கு மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. ஊக்கத்தொகை வழங்கினார். அதுபோது பேரூராட்சித் தலைவர் தசரதன், பேரூர் செயலாளர் சுந்தரமூர்த்தி உள்ளிட்ட கழக மூத்த முன்னோடிகள் கிளை செயலாளர்கள் உடன் உள்ளனர்.



மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில் பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் ஏற்பாட்டில், கோடை வெப்பத்தை தணிக்க விநாயகபுரம்,சின்ன தோப்பு, காந்திநகர், தீயம்பாக்கம், பெரியார் நகர் ஆகிய பகுதிகளில் உள்ள பொதுமக்களுக்கு வீடு வீடாக தர்பூசணி பழங்களை கழகத்தினர் வழங்கினார்கள். 17வது வட்டச் செயலாளர் கே. கருணாகரன், வட்ட நிர்வாகிகள் சி. மூர்த்தி, சி. பாலாஜி, கே. சண்முகப்பிரியன், எஸ்.சிவக்குமார் காந்திநகர் பி. சுந்தரம், டி.வாசு, இ. சுதர்சன், எம். ஜான்சன், ஜி. பூபாலன், எஸ். ஜோசப், சின்னத்தோப்பு ஜி. முனிவேல், விநாயகபுரம் கமலநாதன், வக்கீல் எம். என். தளபதி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.